ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1994/70- 2016 නොවැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11.24

1994/70 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது அமைச்சின் இல.: 03/J/79/E/1106.

எனது இல.: BER/4/5/2/49.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியாளர்கள் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத்தருகிறேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலகப் பிரிவில், 768 பாதாகொட, கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள காணி இல. கா 4618 உடைய காணித் துண்டு இல. 01, 02 மற்றும் 04 என விபரிக்கப்பட்டுள்ள 0.5214 ஹெக்டெயர் பரப்பளவுள்ள கீழ் வரும் விபரம் அடங்கிய காணித்துண்டுகள் மூன்று (3).

1. துண்டு இல. 01

காணியின் பெயர்: மாதன்கஹகுருந்துவத்த அல்லது மாதன்கஹதிகன; விபரம்: திறந்த செதுப்பு நிலம், பாதாகொடை மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்காக பாவனைக்கு உட்படுத்தப்படல், உட்செல்லும் மார்க்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0108 ஹெக்டயார்.

2. துண்டு இல. 02

காணியின் பெயர்: மாதன்கஹகுருந்துவத்த அல்லது மாதன்கஹதிகன; விபரம்: திறந்த சதுப்பு நிலம், பாதாகொடை மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்காக பாவனைக்கு உட்படுத்தப்படல்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.5054 ஹெக்டயார்.

3. துண்டு இல. 03

காணியின் பெயர்: மாதன்கஹகுருந்துவத்த அல்லது மாதன்கஹதிகன; விபரம்: திறந்த சதுப்பு நிலம், பாதாகொடை மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்காக பாவனைக்கு உட்படுத்தப்படல், உட்செலலும் மார்க்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம்; உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0052 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2017, சனவரி மாதம் 04 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பேருவளை பிரதேச செயலகத்தில் என் முன்னிலையில் சமூகமளிக்கும் வேண்டப்படுகின்றனர்.

மற்றும் 2016 திசெம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் அக் காணி சம்பந்தமாக அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மைகளையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈடு பற்றிய தொகைகளையும் அத்தொகை கணிக்கப்பட்ட முறையினையும் எழுத்து மூலம் இரு

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பிரதிகளாக எனக்கு அறியத்தரும்படி வேண்டப்படுகின்றனர்.

கே. ஜீ.டீ. சதுர மல்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2016, நவெம்பர் 18.

12 - 471

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2013/எச்டப்ளியூ/8.

எனது குறிப்பு இல.: தெர/காணி/சுவீ/ஏ/1/10.

02.09.2016 ஆந் திகதிய 1983/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் விசாரணைத் திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 மற்றும் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தெரணியகல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

எச். பி. குணவர்தன,
பிரதேச செயலாளர்,
தெரணியகல.

பிரதேச செயலகம்,
தெரணியகல,
2016, நவெம்பர் 22.

12 - 472

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.